

(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4(10).]

பாராளுமன்றத்தின்
4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

2026 ஒக்தோபர் 23, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

2026 நவம்பர் 03, செவ்வாய்க்கிழமை

பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

வெளிநாட்டுப் பயங்கரவாதிப் போராளிகளைத் தடுத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைத் தடுத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— மீயுயர் நீதிமன்றங்களின் கட்டிடத் தொகுதி முகாமை சபையின் வருடாந்த அறிக்கை (2022),— 1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, மீயுயர் நீதிமன்றங்களின் கட்டிடத் தொகுதி முகாமை சபையின் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் கீழ் 2023.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய மீயுயர் நீதிமன்றங்களின் கட்டிடத் தொகுதி முகாமை சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2022),— 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் சட்டத்தின் 93(2) ஆம் பிரிவின் கீழ் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2023),— 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் சட்டத்தின் 93(2) ஆம் பிரிவின் கீழ் 2025.08.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— இலங்கை சட்டஉதவி ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2022),— தேசிய அரச பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, சட்ட உதவிச் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவின் கீழ் 2024.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சட்டஉதவி ஆணைக்குழுவின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— இலங்கை சட்டஉதவி ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2023),— தேசிய அரச பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, சட்ட உதவிச் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவின் கீழ் 2025.08.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சட்டஉதவி ஆணைக்குழுவின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2020),— 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.04.26 மற்றும் 2025.11.18 ஆம் திகதிகளில் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2021),— 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.04.26 மற்றும் 2025.11.18 ஆம் திகதிகளில் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2022),— 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2024.06.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2023),— 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2025.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் 2024.07.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2023),— 2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் 2025.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

2026 நவம்பர் 04, புதன்கிழமை
பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
(2026, நவம்பர் 04, புதன்கிழமை)

2338/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2025.12.31 ஆம் திகதியளவில் —

(i) உயர் நீதிமன்றத்தில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்களில், வர்த்தக மேல் நீதிமன்றங்களில், மேல் நீதிமன்றங்களில், மாவட்ட நீதிமன்றங்களில், நீதவான் நீதிமன்றங்களில், சிறுவர் நீதவான் நீதிமன்றங்களில் மற்றும் தொழில் நியாய சபைகளில் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை;

(ii) 2020 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரையான ஒவ்வொரு ஆண்டிலும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை, ஆண்டு வாரியாக;

(iii) அவ்வழக்குகளில், 'வழக்கைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு' உயர் நீதிமன்றத்தினால் அனுமதி வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டு வாரியாக;

வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நீதவான் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கையானது, மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து நீதிமன்றங்களிலும் நியாய சபைகளிலும் நிலுவையிலுள்ள மொத்த வழக்குகளின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம்;

(ii) மாவட்ட நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கையானது, மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து நீதிமன்றங்களிலும் நியாய சபைகளிலும் நிலுவையிலுள்ள மொத்த வழக்குகளின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம்;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2389/2026

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2026ஆம் ஆண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக அனுப்புவதற்கு இலக்காகக் கொள்ளப்பட்ட எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2026.01.01ஆந் திகதி முதல் 2026.06.30ஆந் திகதி வரை வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக அனுப்பப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இலக்கு எண்ணிக்கையை அடைவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது தூதுவரொருவர் இல்லாத இலங்கைத் தூதராண்மைக் குழுக்களும், வெற்றிடம் நிலவும் காலப்பகுதியும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) தூதராண்மைக் குழுக்களின் பிரதானிகளுள், இலங்கை வெளிநாட்டுச் சேவையைச் சார்ந்தோரின் எண்ணிக்கையும், வெளியிலிருந்து நியமிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2025.01.01ஆந் திகதி முதல் தற்போதுவரை அமைச்சினால் வெளிநாட்டு விஜயங்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) வெளிநாட்டு விஜயம் மேற்கொண்ட நாடுகள், திகதிகள், பங்கேற்றவர்களின் எண்ணிக்கை மற்றும் அவ்விஜயங்களின் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விஜயத்திற்குமான விமானப் போக்குவரத்து, தங்குமிடம் மற்றும் கொடுப்பனவுகள் உள்ளிட்ட மொத்தச் செலவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) கையொப்பமிட்ட ஒப்பந்தங்கள், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் பெற்றுக்கொண்ட நன்மைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 05, வியாழக்கிழமை)

2339/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதார அமைச்சினால் அரசாங்க அச்சகத் திணைக்களம் அல்லது ஆயுர்வேதத் திணைக்களத்தினூடாக 'ஆயுர்வேத', 'சித்த', 'யூனானி' மற்றும் 'ஹோமியோபதி' மருத்துவக் கல்வியின் அடிப்படையில் பாடநூல்கள் அச்சிடப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இறுதியாகப் பாடநூல்கள் அச்சிடப்பட்ட ஆண்டு மற்றும் பாடங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாரம்பரிய மருத்துவ முறைமைகளின் வளரச்சிக்கு துணைசெய்வதற்காக கடந்த 05 ஆண்டுகளில் அரசாங்கத்தினால் அச்சிடப்பட்டுள்ள பாடநூல்கள் யாவை என்பதையும்;

(ii) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2340/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வழக்கு ஒன்றின்போது குழந்தையின் தந்தைமை அல்லது தாய்மை தொடர்பில் சர்ச்சை எழும் சந்தர்ப்பங்களில், அச்சிக்கலைத் தீர்ப்பதற்காக மரபணுப் பரிசோதனைகளைப் (DNA Tests) பயன்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளதென்பதையும்;

(ii) 1999 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பராமரிப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் வழக்கு ஒன்றில் தந்தைமை அல்லது தாய்மை தொடர்பில் சர்ச்சை எழும் சந்தர்ப்பத்தில், மரபணுப் பரிசோதனை ஒன்றுக்காகத் தேவையான மாதிரிகளை வழங்குமாறு உத்தரவிடுவதற்கு நீதிவான் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லையென்பதையும்;

(iii) குழந்தையின் தந்தைமை அல்லது தாய்மை தொடர்பில் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கு ஒன்றின்போது, மரபணுப் பரிசோதனை ஒன்றுக்காகத் தேவையான மாதிரிகளை வழங்குமாறு தரப்பொன்றிற்கு உத்தரவிடுவதற்குப் போதுமான சட்ட ஏற்பாடுகள் இல்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அத்தகைய சட்டரீதியான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், திருத்தம் செய்வதற்கு அல்லது அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் சட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் காலச்சட்டகம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2393/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'சிரம வாசனா நிதியம்' ஊடாக வழங்கப்பட்ட சேவைகளில் தொழில் அமைச்சினால் தொடர்ச்சியாக வழங்கப்படவுள்ள சேவைகள் யாவையென்பதையும்;

(ii) அமைச்சினால் தொடர்ந்தும் நேரடியாக முன்னெடுத்துச் செல்லப்படாத சேவைகளும், அச்சேவைகளைப் பொறுப்பேற்கவுள்ள நிறுவனங்களும் யாவையென்பதையும்;

(iii) அச்சேவைகளை ஒப்படைப்பதற்காக நிலைமாறுகாலச் செயற்பாட்டுத் திட்டமொன்றும், அதற்கான காலச்சட்டகமொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) நிலைமாறு காலப்பகுதியில் பயனாளிகளுக்கு சேவைகள் அல்லது பயன்கள் கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 06, வெள்ளிக்கிழமை)

2394/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'சிரம வாசனா நிதியத்தின்' சேவைகளுக்கான விண்ணப்பப் படிவங்கள், வழிகாட்டிகள், தகைமைகளைப் பூர்த்திச் செய்யும் நிபந்தனைகள் மற்றும் ஏனைய தகவல்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அமைச்சு குறித்த சேவைகளைப் பொறுப்பேற்றப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள், வழிகாட்டிகள், இணையவழிச் சேவைகள் மற்றும் தீர்மானக் கடிதங்களை மும்மொழிகளிலும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காலவரையறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நிதியத்தின் சேவைகளுக்காக அமைச்சின் கீழுள்ள ஒவ்வொரு மாவட்ட தொழில் அலுவலகத்திலும் நேரடியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் வசதிகள் ஏற்படுத்தப்படுமா என்பதையும்;

(ii) இணைய வசதிகள் அல்லது போதுமான டிஜிட்டல் அறிவு இல்லாத ஊழியர்களுக்கு நேரடியாக அல்லது தபால் மூலமாக விண்ணப்பிப்பதற்கான மாற்று வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா என்பதையும்;

(iii) முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவார்களா என்பதையும்;

(iv) கிராமிய மற்றும் முறைசாரா துறையில் உள்ள ஊழியர்களை விழிப்பூட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2497/2026

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தின் 86ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச வேலைவாய்ப்புகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தற்போதுள்ள போட்டிப் பரீட்சை முறையை நவீனமயப்படுத்தி தெரிவுசெய்யும் நடவடிக்கை முறையை இற்றைப்படுத்துதல் என்ற முன்மொழிவானது 2026.09.01ஆம் திகதியின் போது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிதி / பௌதீக முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2498/2026

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— டிஜிட்டல் பொருளாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தின் 102 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக மற்றும் அரசாங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட ஒவ்வொரு பிரஜைக்கும் திட்டவட்டமான டிஜிட்டல் அடையாளக் குறியீட்டினை வழங்குதல் என்ற முன்மொழிவானது 2026.09.01 ஆம் திகதியின் போது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிதி / பௌதீக முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 13, வெள்ளிக்கிழமை)

2341/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் 'சுதேச பாரம்பரிய மருத்துவ முறைமையை' தொடர்ந்தும் பேணிவருவதற்கு சுதேச பாரம்பரிய வைத்தியர்கள் பங்களிப்புச் செய்துள்ளார்கள் என்பதையும்;

(ii) மேற்படி வைத்திய முறைகள் குரு-சீடர் அடிப்படையில் பாரம்பரியமாகத் தொடர்ச்சியாக வந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பிற்காலத்தில் 'வைத்திய தக்சலாவ' (குருகுல) முறைமை மூலம் மேற்படி வைத்திய முறை பேணிவளர்க்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) பல்வேறு நோய்களுக்காக விசேட நிபுணத்துவம் பெற்ற வைத்தியப் பரம்பரைகள் நாடு முழுவதும் இருந்துள்ளன என்பதையும்;

(iii) தொடர்ச்சியாக நிலவிவந்த மேற்படி வைத்திய முறையானது தற்காலத்தில் 'தேசிய மரபுரிமையாகக்' கருதப்பட வேண்டுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) உலக சுகாதார அமைப்பு மற்றும் யுனெஸ்கோ அமைப்பு ஆகியவற்றால் சுதேச மருத்துவ முறைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கொள்கைகளுக்கு இணங்க அவ்வைத்திய முறையைப் பாதுகாப்பதற்கும் பேணிவருவதற்கும் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) பாரம்பரிய வைத்தியர்களைப் பதிவு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள புதிய சட்டமூலம் ஊடாக மேற்படி சர்வதேசக் கொள்கைகள் பாதுகாக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 14, சனிக்கிழமை)

2342/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஆயுர்வேத மருந்துக் கோவையைத் திருத்துவதன் ஊடாக பாரம்பரிய மருத்துவர்கள் தமக்கே உரிய தனித்தன்மை வாய்ந்த மருந்துகளைப் பயன்படுத்தி சிகிச்சையளிப்பது தடைச் செய்யப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாரம்பரிய மருத்துவ மாணவர்களுக்கு அடிப்படைச் சித்தாந்தங்ளை வழங்குவதற்கான முறையான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்திடம் உள்ளதா என்பதையும்;

(ii) எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் அம்மாணவர்களை கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மருத்துவச் சபையால் சமுதாய சுகாதார உத்தியோகத்தர்கள் ஊடாக பாராம்பரிய மருத்துவ மாணவர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அச்சட்ட ரீதியான ஏற்பாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 16, திங்கட்கிழமை)

2499/2026

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தின் 116ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'நியாயமான விலைக்கு பசளையை உள்ளிட்ட விவசாய உள்ளீடுகளை வழங்குதல் மற்றும் சாதகமான விவசாய நடைமுறைகளுக்கு இணங்க இராசயன, சேதனப் பசளைகளை உள்ளிட்ட விவசாய உள்ளீடுகளுக்கான மானியங்கள்'என்ற முன்மொழிவானது 2026.09.01ஆம் திகதியின் போது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிதி / பௌதீக முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 17, செவ்வாய்க்கிழமை)

2500/2026

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தின் 103ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'உள்ளீட்டு வற் (Input VAT) மீதான ஏற்றுமதி அபிவிருத்தி வரியை ஏற்றுமதியாளர்களுக்கு துரிதமாக மீளளிப்புச்செய்ய நடவடிக்கை எடுத்தல்' என்ற முன்மொழிவானது 2026.09.01ஆம் திகதியின் போது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிதி / பௌதீக முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 18, புதன்கிழமை)

2501/2026

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தின் 68ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'நாட்டின் சகல பிரிவுகளிலுமுள்ள ஊழியர்களுக்கும் பொருந்தும் வகையிலான ஓய்வூதியக் கொடுப்பனவு பற்றிய விரிவான கொள்கையொன்றினைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்' என்ற முன்மொழிவானது 2026.09.01ஆம் திகதியின் போது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிதி / பௌதீக முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 19, வியாழக்கிழமை)

2512/2026

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'லங்கா மெட்ரோ ட்ரான்சிட்' (LMT) தனியார் நிறுவனம், இலங்கை அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையின் பிரகாரம் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வுக்கு உட்படுகின்றதா என்பதையும்;

(ii) குறித்த நிறுவனத்திற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்கு, முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஊழியர்களது சம்பளக் கட்டமைப்புடன் ஒப்பிடுகையில், இந்நிறுவன ஊழியர்களின் சம்பளங்களுக்கு இடையே ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iv) சபையின் அனுபவம் மிக்க சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் லங்கா மெட்ரோ ட்ரான்சிட் நிறுவனத்தின் சேவையில் இணைந்துகொள்வதற்கு நியாயமான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2026 நவம்பர் 20, வெள்ளிக்கிழமை
வாய்மூல விடைக்கான வினாக்கள்

374/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் வாகனத் தரிப்பிடம் ஒழுங்கற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வாகனத் தரிப்பிடத்தை உரிய தரத்தில் அமைத்து, வாகன நெரிசலைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி வாகனத் தரிப்பிடத்தின் அபிவிருத்திப் பணியை முன்னுரிமைப் பணியாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி வாகனத் தரிப்பிடத்தை உரிய தரத்தில் அமைப்பதற்காக மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

479/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்தியாவிலும் மாலைத்தீவிலும், அதிகரித்து வரும் எண்ணிக்கையில், இலங்கைக் கடற்றொழிலாளர்கள் கைதுசெய்யப்பட்டு வருவது தொடர்பான சம்பவங்களைத் தடுப்பதற்கு, எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் யாதென்பதையும்;

(ii) இவ்வாறான கைதுகளுக்கான பிரதான காரணங்கள் யாதென்பதையும்;

(iii) இத்தகைய சம்பவங்களைக் குறைப்பதற்காக மீன்பிடிக் கலங்களில் உலகலாவிய இடமறியும் முறைமை (GPS) உபகரணத்தின் கட்டாயப் பாவனை பங்களிப்பு வழங்கியுள்ளதா என்பதையும்;

(iv) இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கான பிரதான காரணங்கள் யாதென்பதையும்;

(v) இலங்கை, இந்தியா மற்றும் மாலைத்தீவுகளில் கைது செய்யப்படும் மீனவர்கள் தொடர்பான நடவடிக்கைமுறைகளுக்கு எடுக்கும் நீண்ட காலத்தினையும் அதற்கான அதிக செலவினத்தையும் கருத்திற்கொண்டு இந்த மீனவர்களுக்கு ஏற்புடையதாக இவ்வாறான சட்ட நடைமுறைகளைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

708/2025

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் இருந்த/இருக்கின்ற பசு மாடுகள் மற்றும் எருமை மாடுகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி பசு மாடுகள் மற்றும் எருமை மாடுகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அவ்வெண்ணிக்கை அதிகரித்துள்ளதா என்பதையும்;

(iv) பசு மாடுகள் மற்றும் எருமை மாடுகளின் எண்ணிக்கை குறைவடைந்திருக்குமெனின், அது இலங்கையில் திரவப்பால் உற்பத்திக்கு தடையாக இருக்குமென அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனின், இது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2414/2026

கௌரவ திலிண சமரகோன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில், மகாஇலுப்பல்லமவில் அமைந்துள்ள அமைச்சுக்குச் சொந்தமான நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கடமைப்பணியும் இன்றைய சூழ்நிலையில் இவை கமத்தொழில் துறைக்கு வழங்கும் பங்களிப்பும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களை நடத்திச் செல்வதற்கும், அதன் பணிகளுக்கும் 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் அளவு, வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் பதவியணியினர் எண்ணிக்கையும், 2025 மற்றும் 2026ஆம் ஆண்டுகளில் சம்பளங்களுக்கும் மேலதிக நேர படிக்கும் செலவிடப்பட்ட தொகை, வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) மேற்படி நிறுவனங்களுக்கான எதிர்வரும் 05 ஆண்டுகளுக்கான கூட்டாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அதன் முக்கிய உத்தேச இலக்குகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி நிறுவனங்கள் வசமுள்ள பாவனையிலுள்ள மற்றும் பாவனைக்கு உட்படுத்தப்படாத கட்டடங்களின் எண்ணிக்கையும், உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கையும், அவற்றின் பாவனைநிலையின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2508/2026

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் பிரதான முகத்துவாரங்கள் மற்றும் நீர்வடிகாலமைப்புகள் தற்போதைய காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படுகின்ற அதிக மழைவீழ்ச்சிக்கு ஈடுகொடுப்பதற்குப் போதுமான திறனைக் கொண்டதாக இல்லையென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) வெள்ளக் கட்டுப்பாட்டிற்காக நீரானது சீராகவும் வேகமாகவும் கடலுக்கு வழிந்தோடக்கூடிய வகையில் நீர்வடிகாலமைப்புகளை புதுப்பிக்கும் வேலைத்திட்டமெதுவும் உள்ளதா என்பதையும்;

(iii) இலங்கையின் பிரதான நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் நீர்வடிகால் வழிகளை உள்ளடக்கிய நவீன அறிவியல் ரீதியான 'தேசிய நீர்வடிகால் வரைபடம்' ஒன்றைத் தயாரித்தல், முகத்துவாரங்களில் காணப்படும் தடைகளை அகற்றுதல், அதிக மழைவீழ்ச்சிக் காலங்களிலும் நீரானது திறம்பட வழிந்தோடக்கூடிய வகையில் பாரியளவிலான நீர்வடிகால் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் மற்றும் எதிர்கால வெள்ள அபாயத்தைக் குறைப்பதற்காகப் புவியியல் மற்றும் நீரியல் தரவுகளின் அடிப்படையிலான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் அளவு எவ்வளவென்பதையும்;

(v) அதற்காக எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 20, வெள்ளிக்கிழமை)

2513/2026

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அதிகளவிலான நிறுத்தி வைப்புக் கட்டணங்களைச் செலுத்த முடியாமை காரணமாக, பெருமளவிலான வாகனங்கள் அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ துறைமுக வளாகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா;

(ii) இவ்வாறு துறைமுகத்தினுள் கைவிடப்பட்டுள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அவ்வாகனங்கள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட ஆண்டுகள் யாவை என்பதையும்;

(iv) வாகனங்களை துறைமுகத்திலிருந்து விடுவித்துக்கொள்ளாததில் தாக்கம் செலுத்தியுள்ள பிரதான காரணிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நீண்ட காலமாகத் துறைமுக வளாகத்தில் இவ்வாறு வாகனங்கள் குவிந்து கிடப்பதன் காரணமாக, துறைமுகத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கும் இடவசதி முகாமைத்துவத்திற்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் யாவை என்பதையும்;

(ii) இவ்வாறு கைவிடப்பட்டுள்ள வாகனங்களுக்கு ஒரு சலுகைக் காலம் அல்லது கட்டணச் சலுகையை வழங்கி, அவற்றை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், அவற்றை அரசுடைமையாக்கி பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்வதற்கு அல்லது அரசாங்க நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2026 நவம்பர் 21, சனிக்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

1022/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டங்களால் குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்த வீடமைப்புத் திட்டத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்தபோதும், அது நிறுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) குறித்த திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்காக அதிகாரசபை ஊடாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக வெவ்வேறாக அத்தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) இத்திட்டத்தின் கீழ் அந்த மாவட்டத்தில் வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட உள்ள பயனாளிகளின் பெயர் பட்டியலைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1227/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் பிரிவின் கீழ், கொடைப்பத்திரங்கள் மூலம் அரச காணிகளுக்கான உரித்தைப் பெற்றுக்கொண்டுள்ள நபர்களுக்காக, கடந்த அரசாங்கத்தினால் 'உருமய' எனும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 'உருமய' இலவச கொடைப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, இதற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த கொடைப் பத்திரங்களைப் பயனாளிகள் அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளனரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிகழ்ச்சித்திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) இதுவரை வழங்கப்பட்டுள்ள 'உருமய' இலவச கொடைப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேலும் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கொடைப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி நிகழ்ச்சித்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாயின், அது தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) நிகழ்ச்சித்திட்டம் உத்தியோகபூர்வமாக இடைநிறுத்தப்பட்டிருப்பின், பயனாளிகளிடமிருந்து அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்கப்பட்ட கொடைப்பத்திரங்களை மீண்டும் இவர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(vii) ஆமெனில், அது மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1382/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்திய நிதி உதவியின் கீழ், 09 பெருந்தோட்டப் பாடசாலைகளை விருத்தி செய்யும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அதற்கென அங்கீகரிக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதுவரை குறித்த கருத்திட்டத்தின் எந்தவொரு நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படாததை அறிவாரா என்பதையும்;

(iv) குறித்த கருத்திட்டத்தை விரைவாக ஆரம்பித்து செயற்படுத்த எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1951/2026

கௌரவ லால் பிரேமநாத்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத் தேயிலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பான விசாரணை அறிக்கையை அமைச்சு ஏற்றுக்கொண்டுள்ளதா;

(ii) மேற்படி பொதுப் பணத்தைச் சம்பந்தப்பட்ட நபர்களின் தனிப்பட்ட சொத்துக்களிலிருந்து அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) மேற்படி சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(iv) சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் பதவிகளை வகிப்பதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2415/2026

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள தொழிற்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலும் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனங்களில் தற்போது கற்பிக்கப்படும் பாடநெறிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 21, சனிக்கிழமை)

2527/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) உணவு (ஊடுசெல் – கொழுப்புச்சத்து) ஒழுங்குவிதிகள் (அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2319/41) தொடர்பில் —

(i) 2443/07 ஆம் இலக்க மற்றும் 2485/54 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் அமுல்படுத்தலைப் பிற்போடுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இவ்வாறான பிற்போடல்களுக்கு ஆதரவளித்த உணவு ஆலோசனைக் குழுவினதும் தொழில்நுட்ப உப குழுவினதும் விதப்புரைகள் மற்றும் அவற்றின் திகதிகள் யாவையென்பதையும்;

(iii) ஊடுசெல்-கொழுப்புச்சத்து என்பதற்கான திருத்தப்பட்ட வரைவிலக்கணத்தின் அமுல்படுத்தல் திகதியினை 2485/54 ஆம் இலக்க வர்த்தமானி நீக்கியதா என்பதையும்;

(iv) அவ்வாறெனின், இந்த நீக்கலை நிவர்த்திப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) மேலதிக பிற்போடல்கள் பற்றி உத்தேசிக்கப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) தொழிற்துறைப் பங்கீடுபாட்டாளர்களால் முன்வைக்கப்பட்ட விளக்கங்கள் இந்தப் பிற்போடல்களுக்குக் காரணமாக அமைந்தனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், அவற்றின் விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) இந்த வர்த்தமானி அறிவித்தல்களை விநியோகிப்பதற்கு ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு என்பதையும்;

(iv) 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் 32(2) எனும் பிரிவின் கீழ் இந்த ஒழுங்குவிதிகளும் திருத்தங்களும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2026 நவம்பர் 23, திங்கட்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

1003/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில், நாளொன்றுக்கு வெளியேற்றப்படுகின்ற கழிவுகளின் சராசரி அளவு யாதென்பதையும்;

(ii) கொழும்பு நகரில் இன்றளவில் குப்பைகள் அகற்றப்படும் இடங்கள் யாவை என்பதையும்;

(iii) கொழும்பு நகரின் கழிவுகளை புத்தளம், அருவக்காடு பிரதேசத்திற்குக் கொண்டு செல்லும் ஒரு கருத்திட்டம் நடைமுறையில் உள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) அந்தக் கருத்திட்டத்திற்காக இது வரை செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(v) கருத்திட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1225/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு முழுவதிலும் உள்ள குறைந்த மாணவர்கள் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகள் மற்றும் நெரிசல்மிகுந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலை களிடையே அதிகரித்துவரும் ஏற்றத்தாழ்வினை நிவர்த்திசெய்வதற்கு தேசிய கொள்கை ஒன்று காணப்படுகிறதா என்பதையும்;

(ii) நெரிசல்மிகுந்த மாணவர்களைக்கொண்ட பாடசாலைகளில் உட்கட்டமைப்பு, கற்பித்தல் வளங்கள் மற்றும் வகுப்பறை வசதிகளை மேம்படுத்துவதற்கு ஏதேனும் குறுகிய கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் வகுத்தமைக்கப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) தூரப் பிரதேசங்களில் உள்ள மாணவர்களுக்குரிய கல்விக்கான அணுகலைப் பாதிக்காது, குறைந்த மாணவர்கள் எண்ணிக்கையைக் கொண்ட கிராமிய மற்றும் பெருந்தோட்டத் துறைப் பாடசாலைகளை இணைப்பதற்கு அல்லது மீளஅபிவிருத்தி செய்வதற்கு ஏதேனும் மூலோபாயத் திட்டங்கள் காணப்படுகிறதா என்பதையும்;

(iv) ஆசிரியர் பற்றாக்குறைகள் மற்றும் மிகைகளைத் தவிர்ப்பதற்காக, உண்மையான மாணவர் பதிவு விகிதத்திற்கு ஏற்ப ஆசிரியர்களை ஒதுக்கீடு செய்து பணிக்கமர்த்துவதற்கான கொள்கை ஒன்று காணப்படுகிறதா என்பதையும்;

(v) நெரிசல்மிகுந்த மற்றும் குறைந்த மாணவர்கள் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளிடையே கல்வி வசதிகள், தொழில்நுட்பம் மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளுக்கான சமமான அணுகலை உறுதிசெய்வதற்கு எடுக்கப்பட்டுகொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1341/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இலங்கையின் கடல் எல்லையை அண்மித்ததாக மற்றும் இலங்கைக் கடற் பிராந்தியத்தினுள் பதிவாகியுள்ள கப்பல் விபத்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி விபத்துகள் காரணமாக இலங்கையின் கடற் பிராந்தியத்திற்கு ஏற்பட்ட சேதம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டடுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி விபத்துகள் காரணமாக ஏற்பட்ட சேதங்களுக்கு சமுத்திரத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட நபர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

(vi) இலங்கையின் சமுத்திர சூழற்றொகுதியைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1368/2025

கௌரவ எம். எஸ். உதுமாலெப்பை,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கிட்டங்கிப் பாலமானது வெள்ள நிலைமைகளின்போது நீரில் மூழ்குவதால் நாவிதன்வெளி, மத்திய முகாம், நற்பிட்டிமுனை மற்றும் சேனைக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மக்களின் போக்குவரத்துக்குத் தடையாக அமைவதோடு அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், வெள்ள நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் கிட்டங்கிப் பாலத்தை நிர்மாணிப்பதற்கு இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1535/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புகையிரதத் திணைக்களத்தின் கீழ் உள்ள புகையிரத இயக்கத் தளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி, புகையிரத இயக்கத் தளங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு இயக்கத் தளங்களினாலும் இயக்கப்படும் புகையிரதங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி, இயக்கத் தளங்களில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிக்கேற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) இயக்கத் தளங்களில் நிலவும் பௌதீக, மனிதவள மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான குறைபாடுகள் யாவையென்பதையும்;

(vi) புகையிரத சேவையைச் சிறந்த மட்டத்திற்குக் கொண்டுசெல்லும் பொருட்டு, இயக்கத் தளங்களில் நிலவும் குறைபாடுகளுக்குத் தீர்வுகாண மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 23, திங்கட்கிழமை)

2528/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் 23 ஆம் திகதி வரையிலும் மேலும் 2024 செப்டெம்பர் 24 ஆம் திகதியில் இருந்து இற்றை வரையிலும் ஒவ்வொரு வருடமும் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் பெல்வத்த மற்றும் செவனகல அலகுகளால் தயாரிக்கப்பட்ட பழுப்புச் சீனி மற்றும் வெள்ளைச் சீனி என்பவற்றின் ஒவ்வொரு அலகினதும் அளவினையும் வருமானத்தினையும், இலாப/நட்டத்தினையும், கிலோ கிராமுக்கான உற்பத்திச் செலவினையும், விற்பனை செய்யப்பட்ட அளவினையும் மற்றும் விற்பனை செய்யப்படாத இருப்பினையும், வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதிகளுக்காக வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் வருடாந்த இலாப/நட்டத்தினை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) 2024 செப்டெம்பர் மாதத்திற்கு முன்னர் இயங்கி வந்த கம்பனிக்குச் சொந்தமான சீனி விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையினையும், அவற்றின் அமைவிடங்களையும், அதன் பின்னர் திறக்கப்பட்டவற்றின் எண்ணிக்கையினையும் அவற்றின் அமைவிடங்களையும் புரள்வினையும் இலாப /நட்டத்தினையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) 2024 செப்டெம்பர் மாதத்தில் இருந்து உற்பத்தி ஆற்றல், சீனி மீளல், பயிர் செய்யப்பட்ட ஏக்கரளவு, மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட கரும்பின் அளவு என்பன அதிகரித்துள்ளனவா அல்லது வீழ்ச்சியடைந்துள்ளனவா என்பதையும்;

(v) பெல்வத்த மற்றும் செவனகல ஆகியவற்றினை இலாபமீட்டும் உற்பத்திகளாக மீண்டும் ஆக்கி, இறக்குமதி செய்யப்படும் சீனியில் இலங்கை தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் இலக்குகள் யாவை என்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2026 நவம்பர் 25, புதன்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

1194/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தில், நெடுந்தீவின் பிரதான போக்குவரத்து மார்க்கம் கடல் வழிப்பாதையாகும் என்பதை அறிவாரா;

(ii) பயணிகள் போக்குவரத்துச் சேவையில் அங்கு ஈடுபடுத்தியுள்ள 'நெடுந்தாரகை பயணிகள் படகில்' பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி ஊழியர்கள் வகிக்கும் பதவிகள் யாவை;

(iv) மேற்படி ஊழியர்களை நியமனம் செய்துள்ள அடிப்படை மற்றும் நியமனம் செய்யப்பட்ட காலப்பகுதி, பதவி அடிப்படையில் வெவ்வேறாக யாது;

(v) மேற்படி ஊழியர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கியது யார்:

(vi) திரு. வில்லியம் யேசுதாசன் அந்தனிராஜ், திரு. சிந்தாகுலம் மெல்கியாஸ்மிலன், திரு. அல்பட் மரியதாஸன், திரு. அந்தனி அமலதாஸ் மற்றும் திரு. அன்ரூஸ் றகீம்லயோன் ஆகியோரின் கல்வி, தொழிற் தகைமைகள் மற்றும் சேவைக் காலத்தை கவனத்திற்கொண்டு அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா;

(vii) ஆமெனில், நிரந்தர நியமனம் வழங்கப்படும் திகதி யாது;

(viii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1646/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களின் மொத்த நிலப்பரப்பு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) 2009ஆம் ஆண்டிற்கு முன்னரும், தற்போதும் மேற்படி மாவட்டங்களில் வனப்பாதுகாப்புத் திணைக்களம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் தொல்பொருள் திணைக்களம் ஆகியவற்றின் கீழ் உள்ள நிலப்பரப்பு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி மாவட்டங்களில் தரைப்படை, கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் ஆகியவற்றின் கீழ் உள்ள நிலப்பரப்பு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1683/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிண்ணியா மத்திய கல்லூரியில் அமைந்துள்ள அப்துல் மஜீட் மண்டபம் மற்றும் அல் அக்ஸா கல்லூரியில் அமைந்துள்ள எம்.ஈ.எச். மகரூப் கேட்போர் கூடம் ஆகியன நிர்மாணிக்கப்பட்ட திகதிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) கிண்ணியா மத்திய கல்லூரியில் அமைந்துள்ள அப்துல் மஜீட் மண்டபம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் நிர்மாணிக்கப்பட்ட அல் அக்ஸா வித்தியாலயத்தின் எம்.ஈ.எச். மகரூப் கேட்போர் கூடம் உடைத்து அகற்றப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கட்டிடம் உடைத்து அகற்றப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி கட்டடம் முறையான அனுமதியின் கீழ் உடைத்து அகற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அதற்காக அனுமதி வழங்கிய நபர்கள் யாவர் என்பதையும்;

(vi) மேற்படி கட்டடம் உடைத்து அகற்றப்பட்டமை தொடர்பாக, உரிய கல்வி வலயத்தின் கட்டிடங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளரோ வலயக் கல்விப் பணிப்பாளரோ அறிந்திருக்கவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(vii) பயன்பாட்டிற்கு உகந்த நிலையில் காணப்பட்ட ஓர் கட்டிடத்தை உடைத்து அகற்றுவதற்கு அனுமதி வழங்கிய அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(viii) மேற்படி கட்டடம் உடைத்து அகற்றப்பட்டதன் பின்னர், தற்பொழுது மேற்படி பாடசாலைக்கு கேட்போர் கூடமொன்று இன்மையால் மாணவர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருப்பதை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1837/2026

கௌரவ சானக மாதுகொட,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையிலுள்ள மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மீன்பிடி இறங்குதுறைகள் மீன்பிடித் துறைமுகங்களாக நிறுவப்பட்ட திகதிகளும் அக்காலப்பகுதிகளில் கடற்றொழில் விடயத்துறைக்குப் பொறுப்பாக கடமையாற்றிய அமைச்சர்களின் பெயர்களும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) அதிகளவான மீன்பிடி இறங்குதுறைகள் மீன்பிடித் துறைமுகங்களாக அபிவிருத்தி செய்யப்பட்ட காலப்பகுதி யாதென்பதையும்;

(iv) இறங்குதுறையொன்றை மீன்பிடித் துறைமுகமாக நிறுவும்போது மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1964/2026

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மருத்துவ புனர்வாழ்வு வைத்தியசாலைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அலகுகள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைகளினதும் அலகுகளினதும் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலைகளுக்கும் அலகுகளுக்குமான வருடாந்த ஒதுக்கீடு வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலைகளினால் ஆகக்கூடிய சேவையை வழங்கும் பொருட்டு தற்போதுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக உள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) நிலவும் பணியாட்டொகுதி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்பார்க்கின்ற திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அலகுகளில் செயற்கை உடல் உறுப்பு தயாரித்தல், சக்கர நாற்காலி தயாரித்தல் அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான வசதிகள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பணிகளுக்காக விசேட நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 25, புதன்கிழமை)

2529/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 (2319/40 ஆம் இலக்க வர்த்தமானி) உணவு (சுட்டுத்துண்டிடுதல் மற்றும் விளம்பரப்படுத்துதல்) ஒழுங்குவிதிகளை 2024 சனவரியில் இருந்து மீண்டும் மீண்டும் பிற்போடுவதற்கான, திருத்துவதற்கான, இறுதியில் அவற்றினை 2026 ஜூன் மாதத்தில் 2494/47 ஆம் இலக்க வர்த்தமானியினால் பதிலீடு செய்தமைக்கான தொழில்நுட்ப, சட்ட மற்றும் நிர்வாக காரணங்களும் மேலும், உள்நாட்டுக் கைத்தொழில்கள், வியாபாரங்கள் மற்றும் நுகர்வோர் மீதான அதன் தாக்கங்களும் எவை என்பதையும்;

(ii) 2024 ஆம் ஆண்டிலும் 2025 ஆம் ஆண்டிலும் உணவு சுட்டுத்துண்டிடுதல் மற்றும் விளம்பரப்படுத்துதல் மீறல்கள் என்பவற்றுக்காக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கையினை வருடம் மற்றும் மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2022 ஆம் ஆண்டில் இருந்த நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விளம்பரப்படுத்தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் 2026 ஒழுங்குவிதிகளால் நீக்கப்பட்டனவா/ வலுவிழக்கச் செய்யப்பட்டனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளை வரைவதற்கும் வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் திருத்துவதற்கும் ஏற்பட்ட மொத்தச் செலவினம் எவ்வளவு என்பதையும்;

(iv) உணவுச் சட்டத்தின் 32(2) எனும் பிரிவின் கீழ் அவை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திகதிகள் எவை என்பதையும்;

(v) இதே போன்ற ஒழுங்குவிதிகள் எதிர்காலத்தில் மீண்டும் பிற்போடப்படுவதையும் திருத்தப்படுவதையும் இரத்துச் செய்யப்படுவதையும் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைகள் எவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2026 நவம்பர் 26, வியாழக்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

1913/2026

கௌரவ பீ. ஆரியவங்ஷ,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்யின் அளவு ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பின், அதன் அளவு மற்றும் அதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம், ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியினுள் தேய்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், அதன் அளவு மற்றும் அதற்குச் செலவிடப்பட்ட பணத்தொகை, ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) தேங்காய் எண்ணெயின் தரநிலையை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2200/2026

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்பொழுது வெளிநாட்டுத் தூதரகங்களில் தொழிலாளர் நலன்புரி உத்தியோகத்தர்களாக பணியாற்றுபவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் பணியாற்றும் இடங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு பணிக்கப்பட்டுள்ள கடமைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முறைமை யாதென்பதையும்;

(v) குறித்த ஆட்சேர்ப்புகளை திறன் அடிப்படையில் மேற்கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2290/2026

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் கடந்த காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரிய அளவிலான ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் காரணமாக, அச்சங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது என்பதையும்;

(ii) கட்டடங்களை குறைந்த தொகைக்கு குத்தகைக்கு வழங்குதல், சில குத்தகைதாரர்களினால் அவற்றை உபகுத்தகைக்கு வழங்குதல், நீண்டகாலமாக நிலுவையிலுள்ள குத்தகைத் தொகைகளை அறவிடாமை போன்ற முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சங்கத்தின் கிளைகளின் எண்ணிக்கை, கடந்த தேர்தல் நடத்தப்பட்ட திகதி மற்றும் தற்போது முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) கடந்த தேர்தல் நடைபெறும் வரை இடைக்கால சபையொன்றினால் நிர்வகிக்கப்பட்ட காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) வாக்காளர் பெயர்ப்பட்டியலில் முறைகேடுகள் காணப்படுதல், பெரும்பான்மையான உறுப்பினர்கள் வயோதிபர்களாக இருத்தல், புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் குறிப்பிட்டதொரு குழுவினருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் சங்கத்தின் சமூகப் பங்களிப்பு தொடர்பில் இளைஞர் சமூகத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படாமை தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் காரணமாக ஏற்பட்ட இழப்புகளை மீள அறவிடுவதற்கும், சங்கத்தின் நிர்வாக முறைகேடுகளைச் சீர்செய்வதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2291/2026

கௌரவ சுனில் றாஜபக்ஷ,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் அரச பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் சொந்தமான தோட்ட வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு தொழிலாளர் வேலையைத் தவிர சுயதொழில் அல்லது வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவர்களின் பெயரில் வியாபாரங்களைப் பதிவுசெய்வதற்கான இயலுமை உள்ளதா என்பதையும்;

(iii) வியாபாரத்தைப் பதிவுசெய்யும் போது வியாபார இடத்தின் உரித்தை உறுதிப்படுத்துவது தொடர்பில் நிலவும் ஏற்பாடுகள் யாவை என்பதையும்;

(iv) பிரஜா சக்தி அல்லது சமூர்த்தி வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் தோட்ட வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு விவசாயம் அல்லது கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் பொருட்டு பயன்படுத்தப்படாத தோட்டக்காணிகளை வழங்கும் ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2571/2026

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கோயில்களைப் பதிவு செய்யும்போது காணி உரிமையை அத்தாட்சிப்படுத்துவது அவசியமானது என்பதையும்;

(ii) தோட்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள கோயில்களைப் பதிவு செய்யும்போது, தோட்ட நிருவாகத்தின் அங்கீகாரம் கோரப்படுவதோடு, சில சந்தர்ப்பங்களில் அதற்கான சிபாரிசுகள் வழங்கப்படாமை காரணமாக கோயில்களைப் பதிவு செய்ய முடியாதுள்ளது என்பதையும்;

(iii) தோட்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள கோயில்களைப் பதிவு செய்யும்போது, கிராம அலுவலர்களினாலும் காணி நிர்ணயம் தொடர்பான பரிந்துரை வழங்கப்படுவதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 26, வியாழக்கிழமை)

2560/2026

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தின் 107ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'பாரியளவிலான பொருளாதார மற்றும் பரிமாற்ற நிலையங்களை மாவட்ட மட்டத்தில் நிறுவுதல்' என்ற முன்மொழிவானது 2026.09.01ஆம் திகதியின் போது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிதி / பௌதீக முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2026 நவம்பர் 27, வெள்ளிக்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

2179/2026

கௌரவ சட்டத்தரணி சரத் குமார,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள சிவில் பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்களின் நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனவா;

(iii) குறித்த படையினர் சேவையில் ஈடுபட்டுள்ள முகாம்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இப்படையினர் தற்காலிக சேவை நிலையங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஏதேனும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) குறித்த படையினருக்கு குறிப்பான சேவை நிலையங்களை வழங்குவதற்கான சாத்தியம் உள்ளதா என்பதையும்;

(iv) சிவில் பாதுகாப்புப் படையினருக்கு இடமாற்றங்களை வழங்கும் போது பின்பற்றப்படும் வழிமுறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2209/2026

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு முகவர் நிலையத்தினதும் பெயரும் முகவரியும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) 2015ஆம் ஆண்டிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள முகவர் நிலையங்களின் எண்ணிக்கையும் அவற்றின் பெயர்களும் யாவை என்பதையும்;

(iv) வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களை ஒழுங்குறுத்துவதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் பின்பற்றப்படும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், என்?

2515/2026

கௌரவ தேவானந்த சுரவீர,— கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'சிறு வணிக அபிவிருத்திக் கடன் திட்டத்தின்' கீழ் 2025ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப்பயனாளிகளைத் தெரிவு செய்யும் செயன்முறையை மேற்கொள்ளும் நிறுவனம் யாதென்பதையும்;

(iii) வங்கிக் கடன்களைப் பெற்று சிறு வணிகங்களை ஆரம்பித்து நடத்திவந்த நிலையில், 'கொவிட்-19' மற்றும் 'தித்வா' போன்ற இயற்கை அனர்த்தங்கள் காரணமாக வணிக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட வணிகர்களை மீளக் கட்டியெழுப்புவதற்காக இத்திட்டத்தின் கீழ் கடன் உதவி வழங்கும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதன் பயனாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) தகுதியானவர்களைப் புறக்கணித்து, தகுதியற்றவர்களுக்குக் கடன்கள் வழங்கப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணையொன்று நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இதுவரை கடன்களைப் பெற்றுள்ள பயனாளிகளான சிறு வணிக நிறுவனங்களின் ஊடாக வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வருமான அதிகரிப்பு தொடர்பில் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அம்மதிப்பீட்டு முறையியல் யாதென்பதையும்;

(iii) எதிர்காலத்தில் இக்கடன் திட்டத்தை மேம்படுத்துவதற்காக வட்டி வீதங்கள், பிணைகள் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் கொள்கை ரீதியான மாற்றங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அம்மாற்றங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2517/2026

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் உத்தியோகபூர்வ இல்ல வசதிகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iii) இன்றேல், உத்தியோகபூர்வ இல்லங்கள் இல்லாத பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ இல்லங்கள் அற்ற பொலிஸ் நிலையங்களுக்காக உத்தியோகபூர்வ இல்லங்களை அமைப்பதற்கு அல்லது வழங்குவதற்காக மதிப்பிடப்பட்டுள்ள செலவு யாதென்பதையும்;

(ii) இன்றளவில் நிர்மாணிக்கப்படுகின்ற உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வாறு நிர்மாணிக்கப்படுகின்ற உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள பொலிஸ் நிலையங்கள் யாவை;

(iv) பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களின் இலவச உழைப்பினைப் பெற்று உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைக்கப்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) உத்தியோகபூர்வ இல்லங்கள் இல்லாததால், தனியார் வீடுகள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கென வருடாந்தம் செலவிடப்படும் தொகை யாது என்பதையும்;

(iii) தேவையான உத்தியோகபூர்வ இல்ல வசதிகளை முழுமையாக வழங்குவதற்காக முறையான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா;

(iv) அவ்வாறாயின், அதனை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் கால எல்லை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2565/2026

கௌரவ டப்ளியூ. எச்.எம். தர்மசேன,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ளடங்குகின்ற நீதிமன்ற வலயங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்நீதிமன்ற வலயங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மடுல்ல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கல்கமுவ, நெல்லியத்த, முல்லேகம மற்றும் இங்கினியாகல ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளடங்குகின்ற நீதிமன்ற வலயங்கள் யாவையென்பதையும்;

(iv) அந்நீதிமன்ற வலயங்கள் உத்தியோகபூர்வமாக வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டிருப்பின், அவ்வர்த்தமானி அறிவித்தல் யாதென்பதையும்;

(v) அந்நீதிமன்ற வலயங்கள் இதுவரை வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்படாதிருப்பின், அது தொடர்பில் பொதுமக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்படும் துரித நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 27, வெள்ளிக்கிழமை)

2561/2026

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தின் 120ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'நியாயமான விலையில் முட்டை மற்றும் கோழியிறைச்சியை பெற்றுக் கொள்வதற்கான விலங்குணவு உள்ளிட்ட ஏனைய உற்பத்தி மூலப்பொருட்களுக்கான வரிச் சலுகை' என்ற முன்மொழிவானது 2026.09.01ஆம் திகதியின் போது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிதி / பௌதீக முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2026 நவம்பர் 28, சனிக்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

36/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணிச் சீர்திருத்த ஆணைக்குழு நிதியம் எனும் பெயரில் நிதியமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், தற்பொழுது மேற்படி நிதியத்திலுள்ள சொத்துக்களின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) நிதியத்தின் நிதிகளைப் பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்திச் செய்யும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

167/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கி வரும் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனங்களுள் தனியார் கட்டடங்களில் இயங்கும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை மேற்படி நிறுவனங்களுக்காக வாடகை மற்றும் ஏனைய கட்டடப் பயன்பாட்டுக் கட்டணங்களாகச் செலுத்தப்பட்டுள்ள மொத்தத் தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களை அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் அமைப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2377/2026

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவுசெய்யப்பட்ட ஹோட்டல்கள், சுற்றுலா விடுதிகள் மற்றும் விருந்தினர் இல்லங்களிலிருந்து உள்ளூர் அதிகாரசபைகளினால் அறவிடப்படுகின்ற வரிகள், உரிமக் கட்டணங்கள் மற்றும் ஏனைய அறவீடுகள் தொடர்பாகக் காணப்படும் சட்ட ஏற்பாடுகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறும் நிறுவனங்களுக்கு எதிராக உள்ளூர் அதிகாரசபைகளினால் எடுக்கப்படக்கூடிய சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 05 ஆண்டுகளில் சுற்றுலா விடுதிகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய, அறவிடப்பட்ட மற்றும் நிலுவையாகவுள்ள வரிப்பணங்கள் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) வரி செலுத்தத் தவறியமையினால் வருமானம் குறைந்துள்ள சூழ்நிலையில், ஊழியர் சம்பளத்திற்கான 40% செலவினத்தை ஈடுசெய்யும் விதம் எவ்வாறானது என்பதையும்;

(iii) வரி அறவீட்டில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக, ஊழியர்களின் சம்பளம் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்குப் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) நிலுவை வரிகளை விரைவாக அறவிட்டுக் கொள்வதற்கும், நிதி நிலைத்தன்மையைப் பேணிக் கொள்வதற்கும் ஏதேனும் விசேட வரி அறவீட்டு பொறிமுறை அறிமுகப்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2546/2026

கௌரவ நிஷாந்த பெரேரா,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புறக்கோட்டையில் அமைந்துள்ள குணசிங்ஹ அவர்களின் உருவச் சிலைக்கு அருகிலுள்ள மிஹிந்து மாவத்தையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வர்த்தக மற்றும் குடியிருப்புத் தொகுதியொன்று அமைந்துள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி வர்த்தக மற்றும் குடியிருப்புத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட்ட மற்றும் நிறைவு செய்யப்பட்ட ஆண்டுகள் யாவை என்பதையும்;

(iii) நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், அதன் குடியிருப்புகளும் வர்த்தக நிலையங்களும் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறை யாது என்பதையும்;

(v) அவ்வாறு கையளிக்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் வர்த்தக நிலையங்களின் தற்போதைய நிலைமை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2566/2026

கௌரவ பத்மசிரி பண்டார,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கும் தாதியர் கல்லூரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி தாதியர் கல்லூரிகளில் தற்போது பயிற்சி பெறும் மாணவ தாதியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 2026 ஆம் ஆண்டில் இலங்கை வைத்தியசாலைகளுக்குத் தேவையான தாதிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) தற்போது நிலவும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) தாதியர் கல்லூரிகளைப் பல்கலைக்கழக மட்டத்திற்கு உயர்த்தி தாதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பாக நடைமுறைப் படுத்தப்படும் வேலைத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 28, சனிக்கிழமை)

2567/2026

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபை, கமநல அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றினால் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் கீழ் புனரமைக்கப்படுகின்ற அல்லது பழுதுநீக்கப்படுகின்ற குளங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு உதவி அல்லது வெளிநாட்டுக் கடன் கருத்திட்டங்கள் மற்றும் அந்த ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் அளவு அமெரிக்க டொலர்களிலும் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்களில் குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்களைப் புனரமைத்தல், பழுதுநீக்குதல் அல்லது புதிதாக நிர்மாணித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தின் கீழும் 2026 ஆம் ஆண்டில் புனரமைக்கப்படுகின்ற, பழுதுநீக்கப்படுகின்ற அல்லது புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் நீர்ப்பாசனக் கால்வாய்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தின் கீழும் 2026ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2026 நவம்பர் 30, திங்கட்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

690/2025

கௌரவ ரோஹண பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமத்திய மாகாணத்தில் சியம்பலேவ, நேகம்பஹ வம/அனு/தம்/கல்/ நெளும்பத்கம வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலையொன்று உள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையில் தற்போது கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையில் சேவையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலையை அபிவிருத்திச் செய்வதற்கும், தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

991/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களுக்கான பயன்கள் உரிய முறையில் வழங்கப்படவில்லை எனத் தெரிய வந்துள்ள அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) குறித்த அங்கத்தவர்களுக்கு உரிய பயன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி (i)இல் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் சேமலாப நிதியக் கணக்குகளுக்கான பங்களிப்புத் தொகையை உரிய முறையில் செலுத்தாத அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1745/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமா ஓயா நீர்மின் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டு, அதன் மின் உற்பத்திறன் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இதன் மூலம் தற்போது நாட்டின் மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள மின்சாரத்தின் அளவு எவ்வளவு;

(iii) ஈரான் அரசாங்கம் இத்திட்டத்திற்காக வழங்கியுள்ள நிதியுதவியின் அளவு எவ்வளவு;

(iv) மேற்படி நிதியுதவியானது நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதா, இன்றேல் கடனாக வழங்கப்பட்டுள்ளதா;

(v) இத்திட்டத்தின் சுரங்கப் பாதைகளை நிர்மாணிக்கையில் ஏற்பட்டுள்ள சேதங்களுக்காக சம்மந்தப்பட்ட நபர்களுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2459/2026

கௌரவ தனுஷ்க ரங்கனாத்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது இயங்கும் நிலையிலுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இயங்கும் நிலையில் இல்லாத பேருந்துகளுள், மீண்டும் இயங்கும் நிலைக்கு கொண்டுவரக்கூடிய பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அந்த பேருந்துகளை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி சபை ஊடாக பேருந்துகளை நாளொன்றிற்கு எத்தனை கிலோமீற்றர்கள் வரை சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது என்பதையும்;

(ii) அதில் நாளொன்றிற்கு சேவையில் ஈடுபடுத்தப்படாத சாராசரி தூரம் கிலோமீற்றர்களில் யாதென்பதையும்;

(iii) அதனால், நாளொன்றில் இழக்கப்படும் வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) அவ்வாறு இழக்கப்படும் பயணத் தூரத்தைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2509/2026

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கி வருகின்ற சாரதி பயிற்சி நிறுவனங்களுக்காக தேசிய மட்டத்திலான பொதுவானதும் முறையானதுமான பாடத்திட்டமும் ஒழுங்கமைக்கப்பட்ட ஒழுங்குறுத்துகைச் சட்டகமும் உள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், அனைத்து சாரதி பயிற்சி நிறுவனங்களிலும் ஒரே தரநிலையிலும் தரத்திலும் பயிற்சிகளை வழங்குவதற்காக புதிய பாடத்திட்டமொன்றையும் ஒழுங்குறுத்துகை வேலைத்திட்டமொன்றையும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போதைய சாரதி பயிற்சிப் பாடத்திட்டத்தில் வாகனமொன்றில் ஏற்படக்கூடிய சிறிய தொழில்நுட்ப மற்றும் இயந்திரவியல் கோளாறுகளை அடையாளம் கண்டு அவற்றைச் சீர்செய்துகொள்வது தொடர்பான கோட்பாட்டு மற்றும் நடைமுறைப் பயிற்சி உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய குறைபாடுகளைச் சீர்செய்துகொள்வது தொடர்பான நடைமுறைப் பயிற்சித் தொகுதியொன்றை சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படைப் பயிற்சியில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நெடுஞ்சாலைப் பாதுகாப்பு, போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட அறிவு, வீதி ஒழுக்கம் மற்றும் முதலுதவி தொடர்பான அடிப்படை அறிவு ஆகியவற்றையும் சாரதிப் பயிற்சியில் உள்ளடக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதா என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2026 டிசெம்பர் 01, செவ்வாய்க்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

375/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசியல் கட்டமைப்பில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைந்தபட்சம் 50% ஆக உயர்த்தப்பட வேண்டும் என்பதையும்;

(ii) பாராளுமன்றத்தின் தேசியப் பட்டியலில் குறைந்தபட்சம் 50% பெண்களுக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவொன்று உள்ளதென்பதையும்;

(iii) பாராளுமன்றத் தேர்தல்களுக்காக ஒவ்வொரு மாவட்டத்திற்குமான வேட்பாளர் பெயர்ப்பட்டியலில் 50% பெண்களுக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவொன்று உள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப் படவுள்ள சட்டச் சீர்திருத்தங்கள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

480/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்திலும் சமூக நலன்புரி நன்மைகளை பெற்றுக்கொள்வதற்காக இற்றை வரை பதிவுசெய்யப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் நன்மைகளைப் பெற்றுக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கையை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியான குடும்பங்களை இனங்கண்டு தெரிவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட பொறிமுறை யாதென்பதையும்;

(iv) பயனாளிகளைத் தெரிவு செய்யும் செயல்முறையின் பயனுறுதித்தன்மை தொடர்பாக ஏதேனும் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது வருடாந்தம் ஏற்படும் மொத்த நிர்வாகச் செலவினம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

709/2025

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கால்நடைத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று கடந்த அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டிருந்ததை அறிவாரா;

(ii) அது தொடர்பாக தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

(iii) இலங்கையில் கால்நடைத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

999/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சீனித் தொழிற்சாலைகளில் சீனி உற்பத்திக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்படும் ஏனைய உற்பத்திகள் யாவையென்பதையும்;

(ii) 2023 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஒவ்வொரு தொழிற்சாலையினதும் வருடாந்த உற்பத்தி அளவானது, சீனி மற்றும் ஏனைய உற்பத்திகள் உள்ளடங்கலாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியில் ஒவ்வொரு தொழிற்சாலையினதும் வருடாந்த வருமானம் மற்றும் செலவினம் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது நட்டத்தில் இயங்கும் சீனித் தொழிற்சாலைகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொழிற்சாலைகள் யாவையென்பதையும்;

(iii) அத்தொழிற்சாலைகளில் 2023ஆம் ஆண்டு முதல் இதுவரை ஏற்பட்ட வருடாந்த நட்டம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) இவ்வாறு நட்டம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி தொழிற்சாலைகளை இலாபம் ஈட்டும் நிலைக்கு கொண்டுவருவதற்காக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1356/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியதோணா பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட வேண்டிய மற்றும் புனரமைக்கப்பட வேண்டிய வடிகாலமைப்புத் தொகுதிகள் காணப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவின் லெகூன் பூங்கா வீதியில் புதிதாக அமைக்கப்பட வேண்டிய மற்றும் புனரமைக்கப்பட வேண்டிய வடிகாலமைப்புத் தொகுதிகள் காணப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2026 டிசெம்பர் 02, புதன்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

1342/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தொழிற்சாலையொன்று சிலாபம் தேர்தல் தொகுதியில் உள்ள பங்கதெனிய பிரதேசத்தில் அமைந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அக்காணியின் மொத்த நிலப்பரப்பு யாதென்பதையும்;

(iii) அங்கு அமைந்திருந்த கட்டிடங்கள் இடித்து அகற்றப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) அத்தொழிற்சாலையிலிருந்தும் காணியிலிருந்தும் அதிகபட்ச பயனைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1383/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025ஆம் ஆண்டில் தாய்-சேய் சுகாதார பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு யாதென்பதையும்;

(ii) அந்த நிதியிலிருந்து இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ள நிதியின் அளவு யாதென்பதையும்;

(iii) அந்நிதியைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) பயன்படுத்தப்பட்ட நிதியானது, ஒதுக்கப்பட்டிருந்த மொத்த நிதியின் எத்தனை சதவீதம் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1703/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கி வரும் ஆசிரியர் கல்லூரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அக்கல்லூரிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இக்கல்லூரிகளில் நடாத்தப்படும் பாடநெறிகள் யாவையென்பதையும்;

(iv) புதிய கல்வி மறுசீரமைப்புக்களுக்கு அமைவாக, ஆசிரியர் கல்லூரிகளின் பாடநெறிகளைச் மறுசீரமைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2009/2026

கௌரவ லால் பிரேமநாத்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மதுரட்ட பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான பெவரலிய தோட்டத்தில் நிகழும் இயற்கை மரணங்களைப் பதிவு செய்யும் பொறுப்பை, தற்போதைய தோட்ட நிருவாகம் கைவிட்டுள்ளதால் அங்கு வாழும் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா;

(ii) 1951ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் சட்டம் மற்றும் 08/2023ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணங்க, பதிவு செய்யப்பட்ட ஒரு தோட்டத்தில் நிகழும் இறப்பொன்றை அறிவிப்பதற்கான சட்டபூர்வ அதிகாரமும் பொறுப்பும் தோட்ட நிர்வாகத்திற்கே உரியது என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iii) தோட்ட மருத்துவமனை அல்லது நலன்புரி அதிகாரி ஒருவர் இல்லை எனக் கூறி, ஏனைய தோட்டங்களில் நடைமுறையிலுள்ள இந்தப் பொதுவான செயல்முறையை பெவரலிய தோட்டத்தில் மாத்திரம் நிறுத்துவதற்கு நிருவாகம் எடுத்துள்ள தீர்மானத்திற்கு எதிராக அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை யாது;

(iv) குறித்த தோட்ட நிருவாகத்திற்கு அறிவுறுத்தல்களை வழங்கி, பாதிக்கப்பட்டுள்ள தோட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா;

(v) அவ்வாறாயின், அதற்காக எடுக்கும் காலம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2568/2026

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமத்திய மாகாணத்தில், 'மஹ எல நீர்வழங்கல் கருத்திட்டத்தின்' கீழ் இன்றளவில் குடி நீர் வசதிகள் வழங்கப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் இன்றளவில் நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த கருத்திட்டத்தின் கீழ் இன்றளவில் நீர் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ள பாதைகளின் மொத்த நீளம் கிலோமீற்றரில் யாதென்பதையும்;

(iv) மேலும் நீர் குழாய்கள் பதிக்கப்படவுள்ள வீதிகளின் நீளம் கிலோமீற்றரில் யாதென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் நீர் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 136/2026

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி

கௌரவ கயான் ஜனக

கௌரவ சட்டத்தரணி சுனில் வடகல

கௌரவ கமகெதர திசாநாயக்க

கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ

கௌரவ ஜனித ருவன் கொடித்துவக்கு

கௌரவ சமிந்த லலித் குமார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன

கௌரவ எரங்க வீரரத்ன

கௌரவ முனீர் முலாபர்

கௌரவ ராமலிங்கம் சந்திரசேகர்

கௌரவ லசித் பாஷண கமகே

கௌரவ கிட்ணன் செல்வராஜ்

கௌரவ சந்தன சூரியஆரச்சி

கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ

கௌரவ ஜகத் மனுவர்ண

கௌரவ (திருமதி) தீப்தி வாசலகே

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ முஹம்மட் பைசல்

கௌரவ சுனில் பியன்வில

கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி

கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக

கௌரவ அருண பனாகொட

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ ரொஷான் அக்மீமன

கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம

கௌரவ சுகத் திலகரத்ன

கௌரவ நந்த பண்டார

கௌரவ வசந்த புஷ்ப குமார

கௌரவ அசோக சபுமல் ரன்வல

கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ கே.இளங்குமரன்

கௌரவ ஆனந்த விஜேபால

கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

கௌரவ கந்தசாமி பிரபு

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ பஸ்மின் சரீப்

கௌரவ (டாக்டர்) செல்லத்தம்பி திலகநாதன்

கௌரவ சட்டத்தரணி பாக்ய ஸ்ரீ ஹேரத்

கௌரவ எரங்க குணசேகர

கௌரவ ஆர்.எம். சமந்த ரனசிங்ஹ

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ

கௌரவ ரியாஸ் பாருக்

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— 1983 கறுப்பு யூலை துன்பியல் சம்பவம் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து முழுமையான ஆய்வொன்றை மேற்கொண்டு அறிக்கையிடுவதற்கும் தேசிய சகவாழ்வை உறுதிப்படுத்துதல் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான அதன் முன்மொழிவுகளையும் பரிந்துரைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமித்தல்,— 1983ஆம் ஆண்டில் இடம்பெற்ற கறுப்பு யூலை காரணமாக பல தசாப்தங்களாக ஒரு நாடென்ற ரீதியில் பொருளாதார, சமூக, கலாசார ரீதியாக பின்னோக்கித் தள்ளப்பட்டு, அதன் காரணமாக ஆயிரக்கணக்கான பெறுமதிமிக்க உயிர்கள் பறிபோனதுடன், பாரிய அளவில் சொத்துகளும் சேதமுற்று பொருளாதார ரீதியாகவும் பாரிய பின்னடைவை எதிர்கொள்ள நேரிட்டது என்பதாலும்;

மக்கள் பிரிவினரிடையே அமைதியின்மை, பீதி மற்றும் சந்தேகம் என்பன அதிகரித்தமையே மேற்படி பௌதீகச் சேதங்களை விடவும் நாட்டிற்கு மிகவும் பாரதூரமான மற்றும் அழிவுகரமான சேதமாக அமைந்தது என்பதாலும்;

இலங்கையின் வரலாற்றில் மிகவும் மோசமான துன்பியல் நிகழ்வாகக் கருதப்படும் 1983 கறுப்பு யூலை சம்பவத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புகள், சொத்துச்சேதங்கள் மற்றும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள உளவியல் மற்றும் சமூக ரீதியான பாதிப்புகள் என்பன இதுவரை முறையான விதத்தில் மதிப்பிடப்படவில்லை என்பதாலும்;

எதிர்காலத்தில் இவ்வாறான இனவாத மற்றும் நெருக்கடியான சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கும்பொருட்டு உறுதிமிக்க சட்டரீதியானதும், சமூகஞ் சார்ந்ததுமான நல்லிணக்கப் பொறிமுறையொன்றைத் தாபிப்பதற்கான தேவைப்பாடு எழுந்துள்ளது என்பதாலும்;

இலங்கையில் பல்வேறு இனங்களுக்கிடையில் நிலவும் நம்பிக்கையையும், நல்லுறவையும் சீர்குலைக்கும் வகையிலான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது அத்தியாவசியமான ஒரு காரணியாக மாறியுள்ளது என்பதாலும்;

அத்தகைய சம்பவங்களுக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளையும், மேற்படி அழிவுகரமான செயற்பாடுகளை வழிநடத்திய நபர்களையும் வெளிக்கொணர வேண்டும் என்பதாலும்;

அச்சம்பவத்தால் பாதிப்புக்குள்ளான மற்றும் தீங்கிற்குள்ளான ஒட்டுமொத்த மக்களின் மனங்களை தெளிவடையச் செய்வதற்காகவும் அவர்களுக்கு ஏதேனும் ஒரு வகையிலான நியாயமான நிவாரணத்தை வழங்குவதோ அல்லது கௌரவமான சுகப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவதோ அரசொன்றின் கடப்பாடாகும் என்பதாலும்;

1983 கறுப்பு யூலை துன்பியல் சம்பவம் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து முழுமையான ஆய்வொன்றை மேற்கொண்டு அறிக்கையிடுவதற்கும் தேசிய சகவாழ்வை உறுதிப்படுத்துதல் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான அதன் முன்மொழிவுகளையும் பரிந்துரைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பன்னிரண்டிற்கு (12) மேற்படாத உறுப்பினர்களை குழு கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேலே குறிப்பிட்ட விடயம் தொடர்பாக விரிவானதோர் ஆய்வினை மேற்கொள்வதற்காக குழுவினால் அவசியமானது எனத் தீர்மானிக்கப்படும் விதத்தில் எவரேனும் ஆளை, குழுவின் முன் தோன்றுமாறு அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு எவரேனுமொருவருக்கு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்துமூலமாக அல்லது வாய்மொழிமூலமாக பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலோ அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டாலோ தடைபெறாது கூடுவதற்கும்,

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து ஆறு (06) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தினால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.